சிறப்பிதழ்
Special Issue

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr.A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*

3-4 பங்குனி 2052
16th - 17th March 2021

ISSN : 2321 - 984X

# நவீனத் தமிழாய்வு

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)

## Journal of Modern Thamizh Research

(A Quarterly International Multilateral Thamizh Journal)

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

சிறப்பிதழ் : தமிழ் உயராய்வுத்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
எளையாம்பாளையம், திருச்செங்கோடு
முதுகலைத் தமிழ்த்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (மகளிர்)
வீராச்சிபாளையம், சங்ககிரி

# தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல்

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**

முனைவர் ம. கவிதா
முனைவர் செ. ஜெயந்தி

*Published by*
**RAJA PUBLICATIONS**
10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.
Mobile : +91-9600535241
website : rajapublications.com

19 பகுதி-5
Part -5

மற்றொன்று:

# செம்மொழித் தமிழ்

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

ஜனவரி - மார்ச்

ஏப்ரல் - ஜூன்

ஜூலை - செப்டம்பர்

அக்டோபர் - டிசம்பர்

Journal of

# Classical Thamizh

**(A Quarterly International Multi latatal Thamizh Journal)**

January - March

April - June

July - September

October - December

ISSN:2321-0737

# பொருண்மையியல் நோக்கில் அகநானூறு – ஓர் அறிமுகம்

**முனைவர் த. ஆனந்தன்**
விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
எளையாம்பாளையம், திருச்செங்கோடு, நாமக்கல்.

## முன்னுரை

அகநானூறு சங்க இலக்கியத்தைச் சேர்ந்த எட்டுத்தொகை எனப்படும் தமிழ் நூல் தொகுப்பில் உள்ள ஒரு அகநூல் ஆகும். இதில் நானூறு பாடல்கள் அடங்கியுள்ளதால் இது அகநானூறு என வழங்கப்படுகிறது. இதற்கு நெடுந்தொகை என்ற பெயரும் உண்டு. இவை களிற்றியானை நிரை, மணிமிடை பவளம், நித்திலக் கோவை என மூன்று பெரும் பகுதிகளைக் கொண்டதாகும். இவ்வாறு உள்ள இந்நூலில் பொருண்மையியல் அடிப்படையில் ஒரு சொல்லினுடைய பொருளைக் கண்டறிந்து அதிலிருந்து சில கருத்துக்களை மட்டும் விளக்குவதே இக்கட்டுரையின் தலையாய நோக்கமாகும்.

## பொருண்மையியல் அறிமுகம்

தமிழ் மொழியியலில் உள்ள உருபனியல், ஒலியனியல், தொடரியல் போல பொருண்மையியலும் ஒரு வகை இயல் ஆகும். பொருண்மையியல் என்பது சொற்களின் பொருட்களை விளக்குகிற ஒரு வகை இயல் ஆகும். மொழிக்கூறுகள் பெற்றுள்ள பொருண்மைத் தன்மையினை அகராதிப் பொருள், இலக்கணப்பொருள், உணர்வுப் பொருள், பயன்பாட்டுப் பொருள், மற்றும் சூழற்பொருள் என பல வகையாக பிரிக்கலாம். நாம் பலச் சொற்களை பேசுகிறோம், எழுதுகிறோம். ஆனால் அவற்றில் ஒரே சொல்லே பல முறை வரும். ஆனால் அந்த ஒரு சொல் பல பொருட்களில் வரும்.

மொழியானது இரண்டு கூறுகளின் அடிப்படையில் செயல்படக் கூடியது. ஒன்று சொன்மை அடிப்படை மற்றொன்று பொருண்மை அடிப்படை. ஒலிக்கூறுகள், சொற்கூறுகள், தொடரமைப்புகள் இவற்றை ஆதாரமாகக் கொண்டு சொன்மை வெளிப்படும். இச்சொற்களும், தொடர்களும் பொருளை உணர்த்த, இதனடிப்படையில் பொருண்மை உண்டாகும். இக்கருத்தைக் கூறவந்த தொல்காப்பியர்,

> "பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
> சொல்லி னாகும் என்மனார் புலவர்"
> (சொல். பெயரியல்: 2)

என்று இவ்விரு கூறுகளையும் புலப்படுத்தியுள்ளார். அதாவது, ஒரு சொல் சொல்லாகிய தன்னையும் குறிக்கும் தான் குறிப்பிடும் பொருளையும் குறிக்கும்.

குறிஞ்சி என்பது குறிஞ்சி என்னும் தன்பெயரையும், குறிஞ்சியாகிய நிலத்தையும் குறிப்பிடுகிறது. இவ்வாறே பாணன் என்ற சொல்லும் தன்பெயரையும் குடிப்பெயரையும் குறிக்கிறது. ஆகவே சொற்கள் அனைத்துமே ஏதேனும் ஒரு பொருளைக் குறிக்கும் தன்மை வாய்ந்ததாக கருதப்படுகின்றன. இக்கருத்தையும் பெயரியல் முதல் நூற்பாவில்,

> "எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே" (சொல். பெயரியல் : 1)

என்று சொல்லுக்கும் பொருளுக்கும் உள்ள தொடர்பைத் தொல்காப்பியர் விளக்கியுள்ளார். இவ்வாறு சொற்கள் பொருள் உணர்த்தும் தன்மையைக் குறித்து ஆராயும் இயலை, பொருண்மையியல் என்று அழைக்கலாம்.

## மொழி அமைப்பில் பொருண்மையியல்

ஒரு மொழியின் அமைப்பு, வடிவமைப்பு, பொருண்மை அமைப்பு என இரு பகுதிகளை

உடையது. எழுத்து அல்லது ஒலியன் அமைப்பு, சொல்லமைப்பு, தொடரமைப்பு ஆகியவை வடிவமைப்பின் கூறுகளாகும். இவ்வடிவமைப்புகள் உலகப் பொருள்கள், செயல்கள், உணர்வுகள், கருத்துகள் போன்றவற்றுடன் எவ்வாறு தொடர்பு கொண்டு அமைகிறது எனக் காட்டும் பகுதி மொழிப் பொருண்மையியல் எனப்படும்.

மரம், மரங்கள் என வரும் ஒருமை – பன்மை வேறுபாடு, தோட்டக்காரன் மரத்தை அரிவாளால் வெட்டினான் என்ற வாக்கியத்தில் தோட்டக்காரன் என்ற எழுவாய் கருத்தாவாக வருவதும், மரத்தை என்பதில் உள்ள ஐ உருபானது செயப்படுபொருள் எனக் காட்டுவதும், அரிவாளால் என்பதில் உள்ள - ஆல் - கருவிப் பொருள் காட்டுவதும் பொருண்மை வேறுபாடே ஆனால், ஒருமை-பன்மை, கருத்தா, செயப்படுபொருள், கருவி போன்றவை இலக்கணப் பொருள் எனப்படும். மரம், தோட்டக்காரன், அரிவாள், வெட்டு போன்றவை வாக்கிய அமைப்புச் சட்டங்களில் வரும் பொருள்கள், செயல்கள் ஆகியவற்றைக் குறிப்பன. இவை ஒரு மொழியில் எண்ணற்றவை. இவை உலகப் பொருள்களுடன் நேரடித் தொடர்புடையவை. இவை ஒரு மொழியின் சொற்கோவைக்கு உரியவை. இவை காட்டும் பொருள் சொற்பொருள் எனப்படும். சொற்பொருள் ஆய்வே பொருண்மையியல் ஆய்வில் மிகப்பெரிய பகுதியும் முக்கியமான பகுதியும் ஆகும். என்னுடைய ஆய்வும் சொற்பொருள் ஆய்வே. இவ்வாய்வின் பயனாக, ஒரு மொழியின் சொற்பொருள் அமைப்பு கண்டறியப்படுகிறது.

### பொருண்மை வகைகள்

மொழியியல் அறிஞர்கள் பொருண்மை உறவுகளை தொடரக உறவு, அடுக்குறவு என இருவகையாக வகைப்படுத்துகின்றனர். இவ்விரண்டில் அடுக்குறவில் அமையும் சொற்களின் பொருளுறவுகள் மட்டுமே ஆய்வின் களமாக அமைகிறது. இப்பொருள் உறவு அடிப்படையில் ஒரு பொருட் பன்மொழி, ஒப்புருச்சொல், மீச்சொல், எதிர்ச்சொல், பொருள் உட்கோடல், சினை - முதல் உறவு என வகைப்படுத்தப்படுகின்றன. இவற்றின் வகைப்படுத்தப்படுகின்றன. இவற்றின் அடிப்படையின் கீழ் ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

### பொருண்மை உறவுகள்

ஒரு மொழியின் சொற்களுக்கு இடையேயுள்ள பொருண்மை உறவுகளை நான்கு வகைப்படுத்தலாம்.

1. ஒரு பொருட் பன்மொழி
2. பொருள் வேறுபாடு
3. பொருள் உட்கோடல்
4. சினை - முதல் உறவு

### ஒரு பொருட் பன்மொழி

பொருள் ஒற்றுமையுடைய சொற்கள் ஒரு பொருட் பன்மொழிகள் எனப்படும். அகநானூற்றில் வரும் சினம் (24-18), சீற்றம் (158-16) செயிர் (371-2) ஆகிய சொற்கள் 'கோபம்' என்ற பொருளில் வரும் ஒரு பொருட் பன்மொழிகள். அதுபோல கேளிர் (173-2), கிளைஞர் (93-1), சுற்றம் (17- 6) ஆகிய சொற்கள் 'உறவினர்' என்ற பொருளில் வரும் ஒரு பொருட் பன்மொழி சொற்களாகும். இவ்வாறாக ஒரு குறிப்பிட்ட அளவிலான சொற்கள் இப்பொருள் உடையனவாக அமையும்.

### ஆய்வு கட்டுரையின் மூலங்கள்

சங்க இலக்கியச் சொல்லடைவு, அகநானூறு புலியூர்க் கேசிகன் உரை, நா. மு. வேங்கடசாமி நாட்டார் உரை ஆகிய நூல்கள் ஆய்வின் மூலங்களாக அமைகிறது.

### ஆய்வு முறைகள்

மொழி காலந்தோறும் மாறும் தன்மை உடையது. எனவே இரண்டாயிரம் ஆண்டுகட்கு முந்தைய அகநானூற்றில் சொற்கள் காட்டும் பொருண்மை அமைப்பை ஆராயும் போது

அதற்குத்தக்க ஆய்வு முறைகளை வகுத்துக் கொள்ள வேண்டும். அக்காலச் சொற்களில் பல சொற்கள் வடிவம் மாறாமல் தற்காலத் தமிழில் வழங்கினாலும் பொருள் மாறுபட்டுள்ளன. உதாரணமாக 'உண்மை' என்ற சொல் தற்காலத் தமிழில் பொய்யின் எதிர்ச்சொல்லாக வழங்குகிறது. ஆனால் சங்கத்தமிழில் மெய் என்ற சொல்லே பொய்யின் எதிர்ச்சொல்லாக இருந்தது. இவ்வாறு பொருத்தமான சொற்களைத் தேர்ந்தெடுத்துப் பொருண்மை உறவுகளைக் கண்டறியலாம்

## முடிவுரை

மேற் சொல்லப்பட்ட கருத்துக்களோடு இந்த ஆய்வினை மேற்கொண்டால் அகநானூற்றில் உள்ள பழந்தமிழின் பொருண்மை அமைப்பை நன்றாகப் புரிந்து கொள்ளலாம். இது தமிழ்ப் பொருண்மை அமைப்பில் காலப்போக்கில் நிகழ்ந்துள்ள மாற்றங்களை அறிந்து தமிழின் பொருண்மை அமைப்பு வரலாற்றை ஆய்வதற்கு அடித்தளமாக அமையும்.

## துணை நூல்கள்

1. மாதையன், பெ. (2007), சங்க இலக்கியச் சொல்லடைவு. தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

2. மாதையன், பெ. (1997), அகராதியியல், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

3. புலியூர்க் கேசிகன், (2012), அகநானூறு நித்திலக்கோவை மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை.

4. புலியூர்க் கேசிகன், (2012), களிற்றியானை நிரை, மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை.

5. புலியூர்க் கேசிகன், (2012), மணிமிடை பவளம், மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை.

ஃ